சேலம் இரும்பாலை அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டபோது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுகிறேன். பிரசித்திபெற்ற கஞ்சமலை சித்தர் கோவில் திருத்தலத்திற்கு சமுதாய நலக் கூடம் அமைத்துக் கொடுத்திடவும், கஞ்சமலையைச் சுற்றி கிரிவலம் வருவதற்கு மலையைச் சுற்றியுள்ள ஊராட்சிகளான முருங்கப்பட்டி, மூடுதுறை, பெருமாம்பட்டி, புத்தூர், நெய்க்காரப்பட்டி, உத்தமசோழபுரம், வீரபாண்டி, சீரகாபாடி, கல்பாரப்பட்டி, இளம்பிள்ளை ஆகிய பேரூராட்சிகளில் உள்ள சாலைகளை இணைத்து மலையைச் சுற்றி மலைப்பாதை அமைக்கவும் வேண்டுகிறேன். அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள ஏரிகளை ஆழப்படுத்தவும், அனைத்து ஏரிகளை இணைக்கும் கால்வாய்களைச் சீரமைக்கவும் வேண்டுகிறேன்.

இந்த வாய்ப்பை எனக்கு நல்கியிருக்கின்ற தங்களுக்கும், நம்முடைய இதய தெய்வம் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இந்த மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அருமை அண்ணன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை, 17–8–2011 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை (17–8–2011) புதன்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (17–8–2011) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நாளை பதிலுரை வழங்குவார்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17–8–2011) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

16. மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

17. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

18. வேளாண்மைத் துறை பற்றிய 'மக்கள் சாசனம்'. (தமிழ், ஆங்கிலம்)

*****